

இளைஞர் எழுச்சி நாள் விளையாட்டு திருவிழாவில், சைக்கிள் போட்டியை கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ துவக்கி வைத்து, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.



மயிலாடுதுறையில் அம்பேத்கர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி,சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் இலவச தையல் இயந்திரங்களை பயனாளிகளுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் வழங்கினார். உடன் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் எஸ்.ஸ்ரீகாந்த் மாவட்ட கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், எம்.பன்னீர்செல்வம், எஸ்.ராஜ்குமார், ஜெகபாண்டியன், பி.எம்.ஸ்ரீதர், இராம. இளங்கோவன், ஜி.என்.ரவி, மகா.அலெண்டர் மற்றும் பலர் உள்ளனர்.

### மயிலாடுதுறையில் அம்பேத்கர் நினைவு தினத்தை முன்னிட்டு

# 2025 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்! நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. - எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., பங்கேற்பு!

மயிலாடுதுறை, டிச. 10-

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் அண்ணல் அம்பேத்கர் நினைவு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 2025 பயனாளிகளுக்கு ரூ.8 கோடியே 70 இலட்சத்து 40 ஆயிரத்து 524 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகம் அரங்கில் நடைபெற்ற விழாவில் பயனாளிகளுக்கு முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயத்தொழில் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கியதை தொடர்ந்து மயிலாடுதுறையில் அண்ணல் அம்பேத்கர் நினைவு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 2025 பயனாளிகளுக்கு ரூ.8.70 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சி தலைவர் எஸ். ஸ்ரீகாந்த் தலைமை தாங்கினார். மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் த.எஸ்.ராஜகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

விழாவில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் 2025 பயனாளிகளுக்கு ரூ.8 கோடியே 70 இலட்சத்து 40 ஆயிரத்து 524 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசுகையில் மயிலாடுதுறை மாவட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் இதுவரை, 27,143 மாணவ மாணவியருக்கு ரூ.12 கோடியே 80 இலட்சத்து 33 ஆயிரத்து 654 மதிப்பிலான ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் மக்களுக்கு நில எடுப்பு செய்து ரூ.1 கோடியே 46 இலட்சத்து 5 ஆயிரம் மதிப்பீட்டில் 404 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம், விலையில்லா தையல் இயந்திரம், விலையில்லா தேய்ப்பு பெட்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 13639 பயனாளிகளுக்கு ரூ.6 கோடியே 48 இலட்சத்து 49 ஆயிரத்து 508 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. அயோத்தி தாசர் பண்டிதர் ஆதிதிராவிடர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.7.90 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அண்ணல் அம்பேத்கர் நினைவு தினத்தை முன்னிட்டு மாண்புமிகு முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறுகிறது. இவ்விழாவில், வருவாய் துறை சார்பில் 281 பயனாளிகளுக்கு ரூ. 1 கோடியே 53 இலட்சத்து 96 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும்;, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.66 ஆயிரத்து 271 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும்;, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 109 பயனாளிகளுக்கு ரூ. 73 இலட்சத்து 70 ஆயிரத்து 070 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும்;, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.31 இலட்சம்; மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும்;, மகளிர் திட்டத்தின் சார்பில் 1190 பயனாளிகளுக்கு ரூ.4 கோடியே 8 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பிலான கடனுதவிகளும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 15 பயனாளிகளுக்கு ரூ. 1 இலட்சத்து 71 ஆயிரத்து 250 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும்;. சமூக நலத்துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ 3 இலட்சத்து, 53 ஆயிரத்து 908 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும்;, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் 28 பயனாளிகளுக்கு ரூ.1 இலட்சத்து 46 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும்;, தொழில் வணிகத்துறை, மாவட்டத் தொழில் மையம் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 57 இலட்சத்து 60 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும்;, தோட்டக்கலை துறை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.42 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும்;, மயிலாடுதுறை மற்றும் சீர்காழி நகராட்சிகளை சேர்ந்த 155 தூய்மை பணியாளர்களுக்கு ரூ.2 இலட்சத்து 79 ஆயிரம் மதிப்பிலான சீருடைகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களும், தாட்கோ நிறுவனம் சார்பில் 203 பயனாளிகளுக்கு ரூ. 26 இலட்சத்து 39 ஆயிரத்து 025 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும்;, மாவட்ட முன்னோடி வங்கி சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.8 இலட்சத்து 47 ஆயிரம் மதிப்பிலான கடனுதவிகளும் என மொத்தம் 2025 பயனாளிகளுக்கு ரூ.8 கோடியே 70 இலட்சத்து 40 ஆயிரத்து 524 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு மக்களின் தேவையறிந்து பல்வேறு நலத்திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி செயல்படுத்தி வருகிறார்கள். பொதுமக்கள் அனைவரும் அரசின் திட்டங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆர். பூங்கொடி. மகளிர் திட்டம் திட்ட அலுவலர் சீனிவாசன், கழகத்தைச் சேர்ந்த விவசாய தொழிலாளர் அணி மாநில இணை செயலாளர் ஜெகவீரபாண்டியன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், இலக்கிய அணி மாநில துணை செயலாளர் வை.சௌமியன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் . இளங்கோவன் ஜி.என்.ரவி, மாவட்ட கழக அவைத்தலைவர் கே.ஜி. சீனிவாசன், மாவட்டக் கழக துணை செயலாளர்கள் மு. ஞானவேலன், எஸ் செல்வமணி, கண்ணகி பன்னீர், மாவட்ட கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், நகர கழக செயலாளர்கள் குண்டாமணி (எ) என்செல்வராஜ், ம.சுப்பராயன், ஒன்றிய கழக செயலாளர் என். இளையபெருமாள், மங்கை எம்.சங்கர், ஏ.ஆர்.ராஜா, எம்.அப்துல்மாலிக், கு.வைத்தியநாதன், அமிர்த. விஜயகுமார், செல்லசேது.ரவிக்குமார், பஞ்சு.குமார், ஏ.ஜி.ஜே.பிரபாகர், பி.எம்.அன்பழகன். ப.முருகமணி. ஞான. இமயநாதன், முவலூர் எம்.மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், நத்தம் ஏ வின்சென்ட், எஸ் சங்கரநாராயணன், பேரூர் செயலாளர்கள் எம் அன்பு செழியன், எஸ்.கே.முத்துராஜா, அண்ணாதுரை, எம். சம்சுதீன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் காளி.தேசபன், முருகன், தீபா சத்யந்திரன்,

தரங்கம்பாடி பேரூராட்சித் தலைவர்.சுகுணசங்கரி, ஒன்றிய குழு முன்னாள் தலைவர் தியாக. விஜயஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# மருத்துவ மாணவிக்கு நிதியுதவி!

## அமைச்சர் முனைவர் கோவி.செழியன் வழங்கினார்!

தஞ்சாவூர், டிச.10 -

தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் பகுதியைச் சேர்ந்த ஏழ்மை நிலையிலுள்ள மருத்துவ மாணவி கல்விக்கு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் நிதியுதவி வழங்கி உதவினார்.

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருப்பனந்தாள் வடக்கு தெருவை சேர்ந்தவர் சரவணன் மற்றும் ஜான்சி ராணி தம்பதியரின் மகள் நேசிகா. ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த இந்த மாணவி மருத்துவ படிப்பு பயில் நிதி நெருக்கடியில் இருந்து வந்தார். இதனையறிந்த உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் மாணவியின் நிலையறிந்து அவரது மருத்துவ படிப்பிற்கு முதற்கட்டமாக ரூ.50 ஆயிரம் நிதி உதவியை மாணவியின் பெற்றோரிடம் வழங்கினார்.

இந்நிகழ்வின் போது திருப்பனந்தாள் மேற்கு ஒன்றிய செயலாளர் கோ.க. அண்ணாதுரை, தஞ்சாவூர் வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் துணை அமைப்பாளர் செல்வகுமார் கட்சி நிர்வாகி ஸ்டாலின் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.



துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர், இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்டம், தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சுகுணாபுரம் பகுதி கழக இளைஞர் அணி ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சி மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி கழகக்கொடி ஏற்றி பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்களை வழங்கினார். இதில் ஜெயந்தி, சிவசக்தி உள்பட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், கட்டிக்கானப்பள்ளி ஊராட்சி, புதிய வீட்டு வசதி வாரிய இரண்டாம் குடியிருப்பில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக, கனிமவள நிதியின் கீழ் ரூ.82 இலட்சம் மதிப்பில் புதியதாக அமைக்கப்படவுள்ள தார்ச் சாலை பணிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் நாகராஜ், அஸ்லாம், வேல்மணி, கோவிந்தசாமி, சாவித்திரி, அன்பரசன் உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

### கும்பகோணம் தொகுதியில் மட்டும்

# ஆறு கோடி மகளிர் இதுவரை விடியல் பயணம்!

## மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. தகவல்!

தஞ்சை, டிச.10-

முதலமைச்சர் உத்தரவின்படியும், போக்குவரத்துத்துறை அமைச்சர் வழிகாட்டுதலின்படியும், கும்பகோணம் அருகே தேவனாஞ்சேரி கடைவீதியில் கும்பகோணத்திலிருந்து அசூர், கடிச்சம்பாடி, நீலத்தநல்லூர் வழியாக கொத்தங்குடி வரை செல்லும் புதிய நகர பேருந்து துவக்க விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக தஞ்சாவூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. பங்கேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார். தொடர்ந்து பொதுமக்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கி சிறப்பித்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த எம்எல்ஏ சாக்கோட்டை அன்பழகன் கூறியதாவது,

தமிழ்நாடு முதலமைச்சரின் பெரும் முயற்சியால் இதுவரை நான்கரை ஆண்டுகளில் மக்கள் விரும்புகிற பல்வேறு திட்டங்களை செயலாற்றி அனைவரின் மனதிலும் நீங்காத இடம் பெற்றுள்ள முதலமைச்சரும், துணை முதலமைச்சரின் பெரும் முயற்சியால் நம்முடைய பகுதியில், குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தில் மகளிர் விடியல் பயணத்துக்காக இதுவரை 199 பேருந்துகள் இயக்கியிருந்தாலும் அதில் புதிய பேருந்துகளாக 153 பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளது. இதில் 153வது பேருந்தை தற்போது இயக்கி வைத்துள்ளேன். இதில் சிறப்பென்றால் இதுவரை இந்த மாவட்டத்தில் 27 கோடி மகளிர்கள் பயணம் செய்துள்ளனர். குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் கும்பகோணம் தொகுதியில் மட்டும் ஆறு கோடி மகளிர்கள் இதுவரை விடியல் பயணம் இந்த அரசால் செய்துள்ளார்கள் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனைத்தொடர்ந்து பல்வேறு பணிகளை தொடங்கி வைக்க உள்ளேன். இதில் நெடுஞ்சாலை துறை மூலமாக ரூ.3 கோடி மதிப்பீட்டில் கும்பகோணம் அம்மாபேட்டைக்கு மிகப்பெரிய சாலையை துவக்கி வைக்கிறோம். முதலமைச்சரின் உங்களுடன் ஸ்டாலின் மூலமாக ஏற்கனவே ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு கலைஞரின் உரிமை தொகை வழங்கிய இந்த அரசு, மீதமுள்ள மகளிருக்கும் வழங்க வேண்டும் என்ற முயற்சியில் அந்த முகாம் மூலமாக வாங்கப்பட்டுள்ள மனுக்களுக்கு வருகிற 15ம் தேதி மீண்டும் ஆயிரம் ரூபாய் வழங்க இருக்கிற நல்ல அரசு நம்முடைய முதலமைச்சரின் அரசு. அதனுடைய துறையை வைத்துள்ள துணை முதலமைச்சரும் சமீபத்தில் சட்டமன்றத்தில் கூறியுள்ளார். அதற்கான உத்தரவு வந்துள்ளது. அது மட்டும் இல்லாமல் தாயுமானவர் என்ற அருமையான திட்டத்தை முதலமைச்சர் துவக்கி உள்ளார். வயது முதிர்ந்தவர்களுக்கு இல்லத்திற்கே சென்று ரேஷன் பொருட்கள் வழங்கும் திட்டம். அதோடு மற்றொரு திட்டமாக அன்பு கரங்கள் என்ற திட்டத்தையும் முதலமைச்சர் தொடங்கியுள்ளார். ஆதரவற்ற குழந்தைகளை அரசு தத்தெடுத்து 18 வயது வரை மாதம் ரூ.2000 வழங்கி காப்பாற்றுகிற நல்ல அரசு இந்த அரசு என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், ஜெ.சுதாகர், மாவட்டப் பிரதிநிதி டி. என்.கரிகாலன், கும்பகோணம் கோட்ட மண்டல துணை மேலாளர் (வணிகம்) தங்கபாண்டியன், உதவி மேலாளர் (தொ.நு) ராஜேஷ், உதவி மேலாளர் பயிற்சி ராஜ்மோகன் கும்பகோணம்1 கிளை மேலாளர் சுரேஷ் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

# பவானி தெற்கு நகர கழக செயலாளர் ப.சீ.நாகராஜன் மறைவு!

## சு.முத்துசாமி - என்.நல்லசிவம் - தோப்பு என்.டி.வெங்கடாசலம் அஞ்சலி!



ஈரோடு, டிச. 10-

ஈரோடு மாவட்டம், பவானி நகர கழக செயலாளராக தொடர்ந்து 25 ஆண்டு காலம் களப்பணியாற்றி தமிழகத்தில் சிறந்த நகரக் கழக செயலாளராக பணியாற்றினார் என கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களால் விருது பெற்ற ப.சீ. நாகராஜன் 9.12.2025 செவ்வாய்க்கிழமை அதிகாலை உடல் நலக்குறைவு காரணமாக காலமானார் என்கிற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாருக்கு சந்திரா என்கின்ற மனைவியும், இளங்கோ என்ற மகனும், முத்தழகி, ஷீலாதேவி என்கின்ற இரு மகள்களும் உள்ளனர். மேலும் இவரின் மருமகள் சிந்துரி இளங்கோ பவானி நகர் மன்ற தலைவராக உள்ளார்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்த ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி, ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், ஈரோடு மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், ஊராட்சி, வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நேற்று (9.12.2025 - செவ்வாய்க்கிழமை) மதியம் 4 மணி அளவில் பவானி மின் மயானத்தில் நடைபெற்றது.



கும்பகோணத்திலிருந்து அசூர், கடிச்சம்பாடி, நீலத்தநல்லூர் வழியாக கொத்தங்குடி வரை செல்லும் புதிய நகர பேருந்தை தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ துவக்கி வைத்தார்.ஒன்றிய செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், ஜெ.சுதாகர், மாவட்ட பிரதிநிதி டி.என். கரிகாலன், கும்பகோணம் கோட்ட மண்டல துணை மேலாளர் (வணிகம்) தங்கபாண்டியன், உதவி மேலாளர் (தொ.நு) ராஜேஷ், உதவி மேலாளர் பயிற்சி ராஜ்மோகன் கும்பகோணம்1 கிளை மேலாளர் சுரேஷ் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் பங்கேற்று சிறப்பித்தனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் அரூரில் டாக்டர் அம்பேத்கரின் 69வது நினைவு நாளையொட்டி தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி.எம்.பி. தலைமையில் நகர கழக செயலாளர் முல்லைரவி ஏற்பாட்டில் அருர் கச்சேரி மேட்டில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. உடன் மாநில நிர்வாகி எஸ்.ராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர் செ.கிருஷ்ணகுமார், ஒன்றிய செயலாளர்கள் ஆர்.வேடம்மாள், பி.எஸ்.சரவணன்,கோ.சந்திரமோகன் சி.தென்னரசு மற்றும் சூர்யாதனபால், ஐடி.விங் கு.தமிழழகன், விண்ணரசன், செல்வதயாளன். மதியழகன் உள்ளிட்ட எராளமான தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.